<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>
<u>CC. No. 86/2017</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 9 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலு | தொழில் | | விவசாயம் |
| த/பெ. | : | அங்கமுத்து (எ) சுப்பாயன் | ஊர் | | கீதாபுரம் |
| வயது | : | 52/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

<u>07.04.2026</u>

<u>**1 ,5 ஆம் எதிரி ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2வது எதிரி இறந்துவிட்டார்.**</u>

<u>**முதல் விசாரணை:**</u>

1) நான் கீதாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது அப்பா பெயர் அங்கமுத்து , சுப்பாயன் என்றும் கூப்பிடுவார்கள். சப்பானி என்பது எனது அம்மா பெயர். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி எனது ஊரில் திருமணம் செய்துள்ளார். 1ம் எதிரியின் பெற்றேரை தெரியும். பஞ்சாயத்திற்கு செல்லும்போது தெரியும். 1ம் எதிரி இளவரசி என்பவரை பட்டுக்கோட்டை வீரமாகாளி கோவிலில் திருமணம் செய்தார். அதை பார்த்து நான் , 1 வது எதிரியிடம் எனது ஊரில் பொண்ணு கட்டிவிட்டு ஏன் திருமணம் செய்கிறாய் என்று கேட்டேன், அது என் சவுரியம் என்று சொல்லிவிட்டார். அந்த திருமணம் நடந்து சுமார் 18,19 வருடம் இருக்கும்.

2) 1ம் எதிரி இளவரசியை திருமணம் செய்ததை பார்த்தபிறகு நான் சென்று மேகலாவிடம் சொன்னேன். அதன்பிறகு பஞ்சாயத்திற்கு கூப்பிட்டார்கள். நானும் ஊரில் பொறுப்பில் உள்ளவர்களும் 1ம் எதிரி வீட்டிற்கு பஞ்சாயத்திற்கு சென்றோம். 2,3 முறை சென்றோம். கடைசி முறை சென்றபோது உங்களால் முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று மிரட்டிவிட்டார், அதோடு வந்துவிட்டோம். மேகலா தற்போது அவரது அம்மா வீட்டில் வசிக்கிறார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நானும் முனியாண்டியும் பங்காளியா என்றால் உறவு முறை.  எங்கள் ஊருக்கும் வீரமாகோவிலுக்கும் இடையே சுமார் 45 கி.மீ இருக்கும்.  கோவிலில் நான் பார்த்ததாக சொல்லும் சமயத்தில் என்னுடன் ஆனந்த் என்பவர் இருந்தார். அன்றையதினமே அதுகுறித்து நான் மேகலா வீட்டாரிடம்  சொல்லிவிட்டேன். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

2) வீரமாகோவில் இந்து அறநிலையத்துறையால் நடத்தப்படும் கோவில் என்றால் எனக்கு தெரியாது.  நான் அன்றையதினம்தான் அந்த கோவிலுக்கு முதல் முறையாக சென்றேன் என்றும் அதனால் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரிதான்.  திருமணம் நடந்த தேதி எனக்கு தெரியாது என்றால் 20 வருடம் இருக்கும். போலிசார் வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும். எதிரி மீது மேகலா திருச்சி கோர்ட்டி வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும்.  அந்த வழக்கில் நான் சாட்சியாக செல்லவில்லை. மேகலாவிற்கும் கொக்கரசன்பேட்டையை சேர்ந்த பாலமுருகன் என்பவருக்கும் இரண்டாவது திருமணம் நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு நடைபெற்றதாக தெரியவில்லை.

3) தற்சமயம் மேகலா கொக்கரசன்பேட்டையில்தான் குடியிருக்கிறார் என்றால் , கொக்கரசன்பேட்டையில் உள்ள அவரது அம்மா வீட்டில் உள்ளார். கொக்கரசன்பேட்டையில் உள்ளாரா, கீதாபுரத்தில் உள்ளாரா என்றால் கீதாபுரத்தில் உள்ளார் ,  இரண்டு ஊருக்கும் குறுக்கே வாய்க்கால் மட்டும்தான் உள்ளது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், மேகலா எனக்கு வேண்டியவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேகலாவிற்கு இரண்டாவது திருமணம் நடைபெற்றது எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 86/2017</u>**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 8 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அல்லிராஜன் | தொழில் | | விவசாயம் |
| த/பெ. | : | கருப்புசாமி | ஊர் | | செம்பியன்கிளரி |
| வயது | : | 56/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

<u>07.04.2026</u>

**<u>1 ,5 ஆம் எதிரி ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2வது எதிரி இறந்துவிட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

–

1) நான் செம்பியன்கிளரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் இதர எதிரிகளையும் தெரியும். 2வது எதிரி இறந்துவிட்டார். இளவரசி , மேகலாவை தெரியாது. எதிரி மணிவண்ணன் மனைவியை தெரியும், பெயர் தெரியாது. மணிவண்ணன் மனைவிக்கும், எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நான் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். அவர்கள் பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்திற்கு என்னை அழைக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)</u>**

நானும் எதிரி மணிவண்ணனும் வேறு வேறு தெருவை சேர்ந்தவர்கள். மணிவண்ணன் எந்த ஊரில் திருமணம் செய்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி இளவரசியை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றும் இதுசம்மந்தமாக எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடையே நான் பஞ்சாயத்து செய்ததாக போலிசார் விசாரணையில்

சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.